## கலென்பிந்துனுவெவ பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 20 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 21 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 512,587 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அப் பெறுமதி ரூபா 761,897 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 249,310 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நீதி மன்றத் தண்டப் பண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) 2012 ஆண்டின் போது நீர்ச் செயற்திட்டம் ஒன்றிற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 3,452,403 தொகை பெறுமதியான நீர் குழாய் இருப்பு கையிருப்பு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) சபையின் வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் காணப்பட்ட காசு மீதி ரூபா 2,000,966 தொகை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 511,776 தொகை எனினும் அம் மீதி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2012 வருட இறுதியில் உள்ளவாறு

அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 777,119 தொகை முறையற்ற விதமான பதிவேடுகளில் இருந்து அகற்றி இருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஊ) வாராந்த சந்தை குத்தகை கொடுத்தது தொடர்பாக மீளாய்வாண்டின் போது வைப்புச் செய்திருந்த ரூபா 856,633 இனை உடன்படிக்கை பிணை பணத்தினை வருமானத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான மிகை அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் வருமானத்திற்கான வைப்புக்கள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடை வாடகை மீதி ரூபா 623,690 தொகை எனக் காணப்பட வேண்டும். எனினும் அம் மீதி ரூபா 961,762 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் அம் மீதி ரூபா 338,072 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த தொகை ரூபா 2,654,720 தொகை எனினும் அப் பெறுமதி ரூபா 9,125,297 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிர்மாண சேவை கடன்பட்டோர் மீதி ரூபா 6,470,577 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) ரூபா 6,680,966 கூட்டுப் பெறுமதியின் 09 கணக்கு விடயங்கள் முன்னைய ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அக் கணக்கு மீதியை அறுதியாக இனங்கண்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

---------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள 05 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகள் இடையே ரூபா 7,180,132 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 39,994,614 இற்கான 03 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விடயங்கள் தொடர்புடைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 2,923,387 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டுப் பற்றாக்குறை ரூபா 196,581 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வீத வரி

--------------

சபையின் மதிப்பிடப்பட்ட வருடாந்த வீத வரி வருமானம் ரூபா 860,679 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் 04 வருட காலம் முதல் காணப்படும் நிலுவை மீதி ரூபா 3,348,456 ஆகும்.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

----------------------------------------------

சபையினால் பேணப்படும் நீதி மன்றத் தண்டப் பணப் பதிவேட்டின் பிரகாரம் 2012 வருட இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,658,754 தொகையில் 2013 ஆண்டின் போது ரூபா 777,119 தொகை பதிவேடுகளில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 511,776 இற்கான நிலுவை மீதியும் பதிவேடுகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ரூபா 1,288,895 இற்கான நிலுவை நீதி மன்றத் தண்டப் பண மீதி ஒன்று முறைசாரா விதமாக ஏடுகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

2.2.3 முத்திரைக் கட்டணம்

-----------------------------------

2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டிருக்கவில்லை. அத்துடன் 2011 மற்றும் 2012 ஆண்டுகள் தொடர்பக ரூபா 972,160 இற்கான தொகை ஒன்று சபைக்கு அறவிடப்பட வேண்டும் என இனங்கண்டிருந்த போதிலும் அம் மீதி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

(அ) சபையினால் செயற்படுத்தப்பட்ட நீர் செயற்திட்டத்தின் நீர் வழங்கும் நிலையத்திற்கு வழங்கியிருந்த மின்சாரத் தொடர்பு சம்பந்தமான மின் விலைப் பட்டிகளுக்கு உரிய காலத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டு பெப்ரவரி மாதம் முதல் 2015 ஜனவரி மாதம் வரை 12 மாத காலப் பகுதியில் இலங்கை மின்சார சபையினால் விலைப் பட்டியுடன் கூட்டியிருந்த வட்டித் தொகை ரூபா 27,215 ஆகும்.

(ஆ) 2002 நவம்பர் 28 திகதி IAI/2002/02 கொண்ட திறைச் சேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான ரூபா 2,750,000 கூட்டுப் பெறுமதியை உடைய வாகனங்களும், பொறியும் பொறித் தொகுதியும் ரூபா 3,452,403 பெறுமதியான நீர் குழாய் இருப்பு மற்றும் பெறுமதியினை இனங்காணப்படாத வய்பிரேட் பிலேட் கம்பெக்டர் இயந்திரம் ஒன்று மீளாய்வாண்டு முழுவதும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

3.3 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

--------------------------------------------------

கலென்பிந்துனுவெவ பிரதேச செயலாளரினால் 2009-2012 ஆண்டு காலப்பகுதியில் ரூபா 18,128,045 செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சனசமூக நீர் செயற்திட்டம் ஒன்று மீளாய்வாண்டின் போது சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதும் குறிப்பிட்ட சொத்துக்களை சரியாக இனங்கண்டு முறைப்படி சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. அதே போல் நீர் தொடர்பு வழங்குவதற்காக அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 903,000 தொகை ஒன்று அறவிடப்பட்டிருந்ததுடன் அவதானிக்கப்பட்ட 07 சந்தர்ப்பங்களில் ரூபா 631,935 தொகை சபை செலவு செய்துள்ளது. எவ்வாறாயினும் நீர் தொட்டியில் மற்றும் குழாய் முறைமையில் சீரின்மை காரணமாக இது வரை நீர் வழங்குவதற்கு முடியாதிருந்ததுடன் தற்போது இச் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்